**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 122** **நாள்: 23.08.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை தேசிய நகர்ப்புற வீடற்றோருக்கான சிறுவர் காப்பகத்தில் தங்கி பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.**

= = = = = =

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுசுகாதாரத்துறையின் கீழ் தேசிய நகர்ப்புற வீடற்றோர் காப்பகங்களில் 38 வீடற்றோருக்கான காப்பகங்களும், 13 சிறப்பு காப்பகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 42,883 வீடற்ற நபர்கள் தங்கி பயனடைந்துள்ளனர்.

இவற்றில் குறிப்பாக சிறுவர்களுக்கான 9 காப்பகங்கள் உள்ளன. இதில் ஒரு காப்பகத்தில் மன வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் 54 நபர்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு சிறப்பான பயிற்சி மற்றும் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 8 சிறுவர்கள் காப்பகங்களில் மொத்தம் 224 சிறுவர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

இக்காப்பகங்களில் உள்ள சிறுவர்களுக்கு முறையான கல்வி வழங்கப்பட்டு வருகிறது. 2018–19 ஆம் கல்வியாண்டில் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 25 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதி, அதில் 21 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 8 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதி அதில் 7 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேசிய நகர்ப்புற வீடற்றோருக்கான சிறுவர் காப்பகத்தில் தங்கி பயின்று 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற 28 மாணவ, மாணவியர்களை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் 19.08.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை அம்மா அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாராட்டி கேடயம், பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் (பொறுப்பு) திரு.க.பாஸ்கரன், இ.ஆ.ப,. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஹரிஹரன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் மகேஸ்வரன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் மற்றும் மாநகர நல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**